BODHI

International Journal of Research in Humanities, Arts and Science

An online, Peer reviewed, Refereed and Quarterly Journal

Vol : 2 No : 1 October 2017 ISSN : 2456-5571

CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

Vol.2 No. 1 October 2017 e-ISSN: 2456-5571

# பாடசாலை மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

**Miss. Jesuiya Dilani**
*Temporary Assistant Lecturer, Department of Education and Child Care, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka*

**ஆய்வுச்சுருக்கம்**

பாடசாலை என்பது சமூகத்தின் கண்ணாடியாக அமையப்பெறுகிறது. நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பவர்களாக அங்கு கற்கும் மாணவர்கள் காணப்படுகின்றனர். அந்தவகையில் பாடசாலை வருகின்ற மாணவர்கள் அனைவரும் கற்றலில் சீரிய வகையில் ஆயத்தமுடைய ஒழுக்கமுள்ளவர்களாக அமைவதில்லை. இதன்படி ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வாளனால் இனம் காணப்பட்ட முக்கியமான பிரச்சினையாக கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஒழுக்கயீனமான செயற்பாடுகள் கற்றலை பாதிப்பதாக அமையப்பெற்றது. அத்தகு காரணிகள் வினைத்திறனான கற்றலிற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது. குறிப்பாக இப்பிரச்சினைகள் பாடசாலையில் சிரேஸ்ட இடைநிலை மாணவர்களிடையே அதிகளவில் காணப்பட்டமையால் ஆய்வுத்தலைப்பானது **''பாடசாலை மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்''** மண்முனை வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிரேஸ்ட இடைநிலைப்பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வு" என அமைகின்றது.

மண்முனை வடக்கு ஆய்வுப்பிரதேசம் அதிகளவில் சிரேஸ்ட இடைநிலை பாடசாலைகள் கொண்டு காணப்படுவதால் அனைத்தும் ஆய்வுக்குட்படுத்த முடியாததால் வசதி மாதிரி அடிப்படையில் 05 சிரேஸ்ட இடைநிலைப்பாடசாலைகள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டது. இதில் தரம் (10,11,12) இல் கற்கின்ற 100 மாணவர்களும் அத்தரங்களிற்கு கற்பிக்கின்ற 50 ஆசிரியர்களும், அம் மாணவர்களின் 50 பெற்றோர்களும் நோக்கமாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுன்ளனர். 5 பாடசாலைகளின் அதிபர்களிடமும் இதற்கான தரவுகளை வினாக் கொத்து முறை, அவதான முறை, நேர்முகங் காணல் போன்ற முறைகள் பயன்படுத்தப்படுதுடன் துணைத்தரவுகள் மண்முனை வடக்கு பிரதேச சபைகளிலும் இருந்து பெறப்பட்டது.இத்தரவுகள் பண்பு ரீதியாகவும், அளவை ரீதியாகவும் எண்சார் தரவுகளாக மாற்றப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணையாக்கம், இரு பரிமாண வரிப்படம், முப்பரிமாணவரிப்படம் சலாகை வரைபுகள் மூலமாகவும் விளக்கப்படுகின்றன. இவ் பகுப்பாய்விற்கு நுஒநட முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

பகுப்பாய்வில் ஒழுக்க ரீதியான பிரச்சினைகளால் முரண்படுதல், வரவுக்குறைவு, அதிகரித்த இடைவிலகல், ஒழுக்கமின்மை, அடைவுவீழ்ச்சி ,கற்றலில் ஆர்வமின்மை, பார்த்தெழுதுதல், தாழ்வுமனப்பான்மை போன்ற பல பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்நோக்குகின்றனர். அதனை நீக்கி கற்றலை மேம்படுத்த ஆசிரியர்களினால் சிறந்த முறையில் பிரச்சினை தீர்த்தல், பரிகாரக்கற்பித்தல் ,மேலதிக விசேட வகுப்புக்களை நடாத்துதல் ,வகுப்பறை முகாமைத்துவம் பேணல், குழு முறைக்கற்பித்தல் மேற்கொள்ளுதல், பரிசு, பாராட்டு போன்ற ஊக்கல்களை வழங்குதல் ,விழுமியப்பாடங்களை போதித்தல், நற்சிந்தனை கருத்துக்களைன் கூறல், வழிகாட்டல்களை வழங்குதல், ஆலோசனைப்படுத்தல் போன்ற தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

**அருஞ்சொற்பதங்கள்:** பாடசாலை மாணவர்கள் , ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் , கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

## அறிமுகம்

### ஆய்வு அறிமுகம்

பாடசாலை மாணவர்களில் சிரேஸ்ட இடையில் கல்வி பயிலும் மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் மண்முனை வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிரேஸ்ட இடைநிலைப்பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வு என்ற ஆய்வுத்தலைப்பில் தரம் (10,11,12) மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது.

### ஆய்வுப் பின்னணி

ஆய்வுப் பிரதேசத்தில் இனம் காணப்பட்ட முக்கிய பிரச்சினையாக கற்றல் செயற்பாடுகளில் பெரும்பாலான மாணவர்கள் ஒழுக்க ரீதியான பின்னடைவினால் கற்றலில் பல பிரச்சினைகளை எதிர் நோக்குவதனை இனம் காண முடிந்தது. குறிப்பாக சிரேஸ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடையே இவ் நடத்தைகள் அதிகளவில் காணப்பட்டமையால் இவ் ஆய்வுத்தலைப்பானது **''பாடசாலை மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்''** மண்முனை வடக்கு பிரதேச

சபைக்குட்பட்ட சிரேஸ்ட இடைநிலைப்பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வு" என அமைகின்றது.

மாணவர்களிடத்தே காணப்படுகின்ற ஒழுக்கமற்ற நடத்தைகளினால் ஆய்வுப்பிரதேச பாடசாலைகளில் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் சீரான முறையில் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாதளவிற்கு தடுமாறுகின்றனர். இம் மாணவர்கள் தொடர்பாக அதிக அக்கறையுடன் செயற்படுவது மிகவும் குறைவாகவே உள்ளது. குடும்ப, சமூக, வாழ்விட, பாடசாலைச் சமூகங்களே பின்புலமாக அமைகின்றது. பெற்றோர்கள் கல்வி அறிவற்றவர்களாக காணப்படுவதாலும் ,பல தார திருமணமுறை, குடும்ப உறுப்பினர்களின் அதிகரிப்பு ,நாளாந்த வாழ்கைச் செலவை தந்தையினால் மட்டும் கொண்டு நடத்த முடியாமை, குடும்பத்தின் உச்ச வறுமை காரணமாக மாணவர்கள் கற்றலில் நாட்டம் செலுத்துவதை தவிர்த்து தொழில்களைச் செய்வதிலேயே விருப்பம் கொள்வதினாலும் இம் மாணவர்கள் வாழும் சமூகச்சூழலானது தவறான பாலியல் உறவுகள், இளவயதுத் திருமணம்,கல்வி கற்ற சமூகத்தின் வேலையில்லாத் திண்டாட்டம், எதிர்பால் கவர்ச்சிகள், தவறான வயது வந்த நண்பர்களின் தொடர்புகள் காரணமாகவும் இவ் நடத்தை பெறுகின்றன இதனால் உள ரீதியான மனமுறிவு , முரண்பாடு, அச்சுறுத்தல், தகைப்பு, பதகளிப்பு போன்ற அழுத்தங்கள் ஏற்படுவதுடன் உடல் ரீதியாக குறைபாடுகளினாலும் இம் மாணவர்கள் பாடசாலையில் முரண்பாடுகளை தோற்றுவித்தல் , கற்றலில் வரவுக்குறைவு, அதிகரித்த இடை விலகல், ஒழுக்கமின்மை, அடைவுவீழ்ச்சி, கற்றலில் ஆர்வமின்மை, கற்பித்தலை விளங்கிக் கொள்ளமுடியாமை, வகுப்பறையில் கதைத்தல், சண்டையிடல், அமைதியின்மை, பார்த்தெழுதுதல், தாழ்வு மனப்பான்மையைக் கொண்டிருத்தல் போன்ற பல பிரச்சினைகளை எதிர் நோக்குவதுடன் ஏனையவர்களது கற்றலிலும் தாக்கத்தை செலுத்துவது பிண்ணனியாக அமைகிறது.

**ஆய்விற்கான நியாயம்**

ஆய்வுப்பிரதேசத்தில் மாணவர்கள் கற்றலில் ஆர்வமின்றி காணப்பட்டனர்.பாடசாலைக்கு சமூகமளிக்கும் வீதம் குறைவாக காணப்படல், வகுப்பறையில் அமைதியின்றி காணப்பட்டல், பாடங்கள் மீது விருப்பமின்றி சீராக செயற்பாடுகளை முன் வைக்காமல் சென்ற நிலையும், இணைப்பாட விதான செயற்பாடுகளில் நாட்டம் இன்றி காணப்பட்ட நிலையும்,ஏனைய மாணவர்களிற்கு இடையூறுகளை ஏற்படுத்தியமையும், பாடசாலை இடைவிலகல் அதிகரித்து காணப்பட்ட தன்மையும் நோக்கக்கூடியவாறு அமைந்தது.

**ஆய்வுப் பிரச்சினை**

இப்பிரச்சினைக்கு மாணவர்களின் சூழற் காரணிகளே பாரிய செல்வாக்கு செலுத்துகின்றன. இவை குடும்பம், பாடசாலைசமூகம், சகபாடிகள் எனப் பல விதங்களில் அமைகின்றன. இதில் வெளிச்சூழல் ரீதியான காரணிகள் கூடிய செல்வாக்கைச் செலுத்தினாலும் உடல், உள ரீதியாகவும் ஒழுக்கமற்ற நடத்தைகளே அதிகளவில் தாக்கத்தை செலுத்துகின்றது. குடும்பத்தில் பெற்றோர்கள் அதிகளவில் தொழிலிற்கு செல்லுதல்,நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் அதிகரித்த பாவனை, குடும்ப பிளவு, பெற்றோர்களின் வெளிநாட்டு மோகம், பிரத்தியேக வகுப்புக்களின் செல்வாக்கு, கருக்குடும்பத்தின் தனிமை நிலை ,சகபாடிகளின் தொடர்புகள், நகரத்துக்கலாசாரம் கற்றல் செயற்பாட்டில் அக்கறை அற்றதாகவும் பிரச்சினை ஏற்படுத்துவதாகவும் செய்கிறது.

**ஆய்வின் நோக்கம்**

**பொது நோக்கம்**

**''பாடசாலை மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்''**

**விசேட நோக்கம்**

- மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகளை இனம் காணல்.
- மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைக்கான காரணங்களை கண்டறிதல்,
- வகுப்பறைக் கற்பித்தல் செயன்முறையில் ஒழுக்க ரீதியான பிரச்சினையுடைய மாணவர்களின் பங்குபற்றலை அறிதல்.

- ஒழுக்க ரீதியான பிரச்சினைகளையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை கண்டறிதல்.
- ஒழுக்க ரீதியான பிரச்சினைகளையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்த தேவையான வழிமுறைகளையும், ஆலோசனை தீர்வுகளையும் முன்மொழிதல்.

**இலக்கிய மீளாய்வு**

பாடசாலைகளில் இடம் பெறுகின்ற கற்றல்-கற்பித்தல் வெசயற்பாட்டின் நோக்கங்களை திட்டமிட்டபடி அடைந்து கொள்ளவும் சமூகத்தினால் எதிர்பார்க்கப்படுகின்ற அடைவுகளை மாணவர்கள் அடைந்து கொள்ளவும் கல்வியில் பொருத்தப்பாடு பிரதானமானது. பொருத்தப்பாடு என்பது ஒருவருக்கும் அவரது சூழலிற்கும் இடையேயுள்ள இசைவாக்கத்தை குறிக்கும்(விமலா கிருஸ்ணப்பிள்ளை, 2009). உள்ளிருந்து உருவாகும் தேவையை நிறைவேற்றும் அதே சமயத்தில் சமூக தேவைகளையும் திருப்திப்படுத்த செயற்படுகின்ற உளச் செயன்முறையை பொருத்தப்பாடு என அழைக்கலாம். இச் செயன்முறையில் வெற்றியும் தோல்வியும் ஆளுக்காள் வேறுபடும்.இதன் போது ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டு கற்றல் பாதிக்கப்படுகிறது

**ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்**

இதன் படி ‘‘பாடசாலை மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்’’ மண்முனை வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிரேஸ்ட இடைநிலைப்பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வு” என அமைகின்றது. இது அளவை நிலை ஆய்வு (Survey Research) வகையில் மேற்கொள்ளப்படுகின்றது.இதன் அடிப்படையில் இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம், ஆவணங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**மாதிரித்தெரிவு**

இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் ஆய்வாளனால் 5 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் சிரேஸ்ட நிலை ஆசிரியர்கள் பொதுவாகவும், மாணவர்கள் 15:1 என்ற அடிப்படையில் 1500 மாணவர்களிற்கு 100 மாணவர்களும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். அத்துடன் அதிபர்கள் 5 பேரும் செய்யப்பட்டுள்ளனர். ஆய்வாளனால் ஆய்விற்காக முழுப் பாடசாலைகளையும் உள்ளடக்காது பாடசாலைகளை தெரிவு செய்தமைக்கான காரணம் தரவு சேகரிப்பின் போதான நேர விரயத்தைத் தவிர்க்கவும், ஆய்வினைதிறமையாக முன்னெடுப்பதற்குமாகும்.

**தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**

இவ் ஆய்வில் மாதிரிகளான மாணவர், ஆசிரியர் ஆகியோரிடம் வினாக் கொத்துக்கள் மூலமாகவும், அதிபர்கள், வழிகாட்டல் ஆலோசகர், பெற்றோர்களிடம் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள் ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில்தொகுக்கப்பட்டு இப்பகுப்பாய்வு இடம் பெறுகிறது. இவ்வாய்வின் தரவு வடிவங்களைத் தீர்மானித்து பின்னர் தரவுகளைச் சேகரித்து அத்தரவுகளைப் பகுப்பாக்கம் செய்து Microsoft Excel-2007 மூலம் அட்டவணையாக்கம், இரு பரிமாண வரிப்படம், முப்பரிமாண வரைபடம், சலாகை வரைபுகள் போன்றன மூலம் குறித்துக் காட்டப்படுகின்றது.

**தரவுப்பகுப்பாய்வு முடிவுகள்**

**மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகளை இனம் காணல்**

**அட்டவணை 1: கல்வியில் விருப்பத்துடன் ஈடுபடல்**

| மாணவர்கள் | வீதம் |
|---|---|
| ஆம் | 45 |
| இல்லை | 55 |

மாணவர்களிடம் ஒழுக்கப்பிரச்சினைகளை இணம் காணும் பொருட்டு கற்றலில் விருப்பத்துடன் ஈடுபடுகின்றீரா? இல்லை எனில் காரணம் கூறுக என வினாவியதற்கு 45% ஆம் எனவும் 55% இல்லை எனவும் மேற்காட்டப்பட்டவாறு பதில் வழஙகப்பட்டது. இதற்கான காரணங்களாக பின்வருவன கூறப்பட்டன.

**அட்டவணை 2: கற்றலில் விருப்பமின்மைக்கான காரணம்**

| காரணங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை | நூற்று வீதம் |
|---|---|---|
| வீட்டின் குடும்ப நிலை | 27 | 27% |
| கற்றலில் நாட்டமின்மை | 31 | 31% |
| கற்பித்தலில் குறைபாடு | 18 | 18% |
| பணம் உழைப்பதில் நாட்டம் | 11 | 11% |
| ஆளனியினருடன் சீரற்ற உறவு | 13 | 13% |
| மொத்தம் | 100 | 100% |

மாணவர்களின் ஒழுக்கமின்மைக்கு இக் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றதை பின்வரும் வரைபடம் மூலம் அறிய முடியும்

**பொருத்தப்பாடற்ற மாணவர்களில் இனம்காணப்பட்ட அறிகுறிகள்**

**அட்டவணை 3: அறிகுறிகள்**

| அறிகுறிகள் | வீதம் |
|---|---|
| உடலியல் | 18 |
| நடத்தை | 27 |
| மனவெழுச்சி | 14 |
| வன் செயல்கள் | 32 |
| தனிமை நாடல் | 9 |

பாடசாலையில் மாணவர்களின் ஒழுக்கமின்மைக்கான செயற்பாட்டிற்கான நடத்தைகளை எவ்வாறான அறிகுறிகள் மூலம் இணம் கண்டீர்கள் என்று வினவிய வினாவிற்கு 32% ஆசிரியர்கள் வன்செயல்களின் மூலமும், 27% ஆசிரியர்கள் நடத்தை சார் அறிகுறிகளையும், 18 % உடலியல் சார் நடத்தைகளையும் மாணவர்களிடத்தில் இனம் கண்டதாக மேற்காட்டப்பட்ட வரைபடம் காட்டுகின்றது.

**கற்றல் செயற்பாட்டில் தாக்கம் செலுத்தும் காரணி**

**அட்டவணை 4: கற்றல் செயற்பாட்டில் சூழல் தாக்கம் செலுத்தும் நிலைப்பாடு**

| காரணிகள் | வீதம் |
|---|---|
| குடும்ப சூழல் | 37 |
| பாடசாலைச் சூழல் | 28 |
| சமூகச்சூழல் | 19 |
| அமைதியற்ற சூழல் | 16 |

குடும்ப சூழல் மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகளிற்கு காரணமாக அமைகின்றது என்று 37% தவவல்கள் ஆசிரிய, மாணவ, வழிகாட்டல் ஆலோசகர்களிடம் இருந்து பெறப்பட்டது. அதிகளவில் குடும்ப சூழலும் அடுத்ததாக பாடசாலை சூழலும் மற்றும் சமூக சூழலும் முடிகளாக பெறப்பட்டது. ஆகவே குடும்பமே அதிகளவில் செல்வாக்கு செலுத்துகிறது.

**அட்டவணை 5: வகுப்பறையில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள்**

| பிரச்சினைகள் | மாணவர்களின் எண்ணிக்கை | நூற்று வீதம் |
|---|---|---|
| வகுப்பறையில் கதைத்தல் | 29 | 29% |
| பாடசாலையில் வரவுகுறைவு | 24 | 24% |
| இடை விலகல் | 13 | 13% |
| சண்டையிடல் | 18 | 18% |
| அமைதியின்மை | 16 | 16% |
| மொத்தம் | 100 | 100% |

**வழங்கப்படும் வழிகாட்டல் ஆலோசனைகள்**

**அட்டவணை 6: வழிகாட்டல் ஆலோசனையின் தன்மை**

| வழங்கப்படும்வழிகாட்டல் ஆலோசனைகள் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | நூற்று வீதம் |
|---|---|---|
| கல்வி சார் வழிகாட்டல் | 12 | 40 % |
| தொழில் வழிகாட்டல் | 7 | 23% |
| சமுக வாழ்க்கை கல்வி வழிகாட்டல் | 4 | 13% |
| உளவளத்துறை வழிகாட்டல் | 5 | 17% |
| வேறு வழிகாட்டல் | 2 | 7% |
| மொத்தம் | 30 | 100% |

மாணர்களிற்கு எத்தகைய வழிகாட்டலை பாடசாலையில் வழங்குகின்றீர் என்ற வினாவிற்கு ஆசிரியர்கள், அதிபர்களிடம் இருந்து மேற்காட்டப்பட்ட பதில்கள் அழிக்கப்பட்டன. ஆனால் கல்வி சார்ந்த வழிகாட்டலிற்கே பாடசாலையில் முக்கியமளிப்பதனை நோக்கமுடிகிறது. 17% உளம் சார்ந்த பிரச்சினைகள் குறைவாகவே வழிகாட்டப்படுகிறது.

**வழிகாட்டலின் போது மாணவர்களின் நிலைப்பாடு**

**அட்டவணை 7: மாணவர் வழிகாட்டலின் போது நிலைப்பாடு**

| தரவு | வீதம் |
|---|---|
| ஆம் | 89 |
| இல்லை | 11 |

மாணவர்களது ஒழுக்கரீதியான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு வழிகாட்டல் பெரிதும் முக்கியமானது. கற்றலை மட்டும் குடும்பச்சூழல், பாடசாலை கவனத்திற் கொள்ளாது மாணவர்களது உள ரீதியான செயற்பாடுகளையும் கவனத்திற் கொள்வதன் மூலம் கற்றலில் ஏற்படும்

பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற நேர்முகம் மூலம் பெற்ற வினாவிற்கு வழிகாட்டல் ஆலோசகர்கள் அளித்த பதிலை இது காட்டி நிற்கிறது.

**தீர்வுகளும், ஆலோசனைகளும்**

**மாணவர்களின் ஒழுக்க ரீதியான நடத்தையை இனம் காணல்**

வகுப்பறையில் கற்பித்தல் செயற்பாடுகளில் மிகக்குறைந்த விருப்பத்துடன் ஈடுபடுகின்ற மாணவர்களின் நடத்தைகளை முதலில் அவதானிக்க வேண்டும். எனவே சிரேஷ்ட இடைநிலைப்பிரிவில் கற்றலை வழங்கும் ஆசிரியர்கள் ஒழுக்கரீதியான நடத்தைகளை இனம் கண்டு அவர்களில் கவனம் வைத்து கற்றலினுள் உள்வாங்க வேண்டும். இதன் பொருட்டு விழுமியக்கருத்துக்களை வழங்கள், நற் சிந்தனைகள் வழங்கள்,வழிகாட்டல் ஆலோசகரின் கருத்துக்களை வழங்கள், விசேட கற்பித்தல் வழங்குதல் போன்றன பிரச்சினைகளை இனம் கண்டு குறைத்துக் கொள்ள உதவும்.

**மாணவர்களின் ஒழுக்கரீதியான நடத்தைக்கான காரணங்களை கண்டறிதல்**

மாணவர்களின் ஒழுக்கரீதியான நடத்தைகளை தோற்றுவிப்பதில் உடலியல், உளவியல், சூழற்காரணிகள் செல்வாக்கு செலுத்துவதுடன் மிகக்கூடியளவு சூழற் காரணிகளே பங்களிப்பு செய்வதாகவும் குறிப்பாக வீட்டு மற்றும், குடும்ப சூழல், பாடசாலைச்சூழல்,சமூக வாழ்விடச்சூழல் அமைவதாக ஆய்வுப்பகுப்பாய்வின் மூலம் அறிய முடிந்தது. உதாரணமாக பெற்றோர் தொழில் செல்லல் , பெற்றோரின் பிரிவு, வெளிநாட்டு மோகம் போன்றனவும், பாடசாலையில் வளப்பற்றாக்குறை, எதிர்ப்பால் கவர்ச்சி, ஆளணியினரின் முரண்பாடுகள் போன்ற காரணங்களும் அதிகளவில் தாக்கத்தை செலுத்துகிற காரணிகளாக இனம் காணப்பட்டது. இதனைக்குறைப்பதற்கு கற்றலில் புலமைப்பரிசில் திட்டத்தை வழங்குதல், பரிகாரக்கற்றல் கற்பித்தலை வழங்குதல், மாணவர்களின் பெற்றோருடன் நேரடியாக கலந்துரையாடி வழகாட்டல் ஆலோசனையை வழங்குதல், விழிப்புணர்வுகளை வழங்குதல் போன்றவற்றை ஏற்படுத்துவதன் மூலம் இனம் கண்ட பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

**பாடசாலை வகுப்பறைக்கற்றல் செயன்முறைகளில் மாணவர்களின் பங்குபற்றலையறிதல்**

ஒழுக்கமற்ற நடத்தைகளினால் அவர்களது கற்றலில் ஈடுபாடு குறைவாக காணப்படும் இதனைக்குறைக்க ஆசிரியர் மாணவத்தளத்தில் இருந்து கற்பித்தலை வழங்குதல், ஒத்துழைப்பு வழங்குதல், பரிசு வழங்கி கற்பித்தலை ஊக்கப்படுத்தல், குழச்செயற்பாடுகளை வழங்கி கற்பித்தலை ஏற்படுத்தல், இணைபாடவிதானச் செயற்பாடுகளை ஏற்படுத்துதல், நூலகப்பாவனைக்கு ஊக்குவித்தல், சமகணிப்பு வழங்குதல் போன்ற செயற்பாடுகள் பலவும் அவர்களது பொருத்தப்பாடற்ற நிலையை களைந்து பங்கு பற்றலை அதிகரிக்கச் செய்யும்.

**மாணவர்களின் ஒழுக்கமற்ற நடத்தைகள் கற்றலில் ஏற்படுத்தும் பிரச்சினைகளை கண்டறிதல்**

இதன்படி குறைந்தளவில் கற்பிக்கும் பாடங்களை விளங்கிக் கொள்ளல், ஒதுங்கியிருத்தல்,அதிகளவில் கதைத்துக் கொண்டிருத்தல், ஒழுக்கமின்மை போன்ற பல காரணிகள் ஆய்வில் இனம்காணப்பட்டது. இதனைக்குறைக்கும் வகையில் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தையும், கற்றலில் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையில் நவீன கற்றல்களையும் ,விசேட வழிகாட்டல் ஆலோசகர்களை பாடசாலையில் நியமித்தலும், ஆலோசனை வழங்களும் முக்கியமாகும். அத்துடன் ஒப்பிடலை தவிர்த்தல், ஊக்கல்களை வழங்குதல், ஆசிரியர்கள் மாணவர்களின் மீது நம்பிக்கை உடையவர் என்பதை விளங்கவைத்தல், சினேகபூர்வமான தொடர்பை வழங்குதல், மாணவர்களை கரிசனையுடன் உளரீதியாக வழிகாட்டுதல் போன்ற செயற்பாடுகள் கற்றலில் பிரச்சினை குறைக்கும் செயற்பாடாக அமையும்.

**மாணவர்களின் செயற்பாடுகளை தீர்ப்பதற்கு தேவையான வழிமுறைகளையும், ஆலோசனை வழிகாட்டலையும் பிரதானப்படுத்தல்**

வழிகாட்டல்களும், பரிகாரக்கற்பித்தலும் குறைந்த அளவிலேயே மாணவர்களிற்கு வழங்கப்படுவதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. இதனைக்குறைப்பதற்கு பரிகாரக்கற்பித்தலை மையப்படுத்தல், விசேட வகுப்புக்களை வழங்குதல்,

வகுப்பறை முகாமைத்துவத்தை சிறப்பாக வழங்குதல், விழுமியப்பாடங்களை போதித்தல், ஆலயத்திற்கு செல்லல், வலய மாாண மட்டங்களில் இம் மாணவர்களிற்கான கற்றல்- கற்பித்தல் முறைகளை வழங்குதல்,பயிற்சி பாசறைகள், உள வள ஆலோசனை நிகழ்சிகளை ஏற்படுத்துதல், வழிகாட்டல் ஆலோசகர் தமது பணியை சிறப்புறச் செய்தல், எதிர்பால் மீதுள்ள நாட்டத்தினால் தற்போது துஸ்பிரயோகங்களின் எண்ணிக்கை அதிகரித்தும் காணப்படுகிறது அதனை தவிர்க்க பாலியல் கல்வியின் தேவைப்பாட்டை முறைப்படி வழங்குதல் போன்ற காரணிகள ஒழுக்கமற்ற நிலைகளை மாணவர்களிடத்தில் களைவதற்கு உதவும்.

## முடிவுகள்

**''பாடசாலை மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்''** மண்முனை வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிரேஸ்ட இடைநிலைப்பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வானது சமூகத்தில் தற்போது அதிகரித்துக் காணப்படும் பல்வேறு ஒழுக்க ரிதியான பிரச்சினைகளை கண்டறிவதுடன் அவற்றினால் தற்போது வகுப்பறைக்கற்றலில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டு அதனை நீக்கக்கூடிய வழிகளையும் விளக்கி நிற்கிறது.

## உசாத்துணை நூல்கள்

1. அருள் மொழி. செ, (2008), கல்வி ஆய்வு முறைகள், எவகிரீன் அச்சகம், மட்டக்களப்பு.
2. சந்திரசேகரன். சோ, (2004) கல்வி ஒரு பண்முக நோக்கு , உமா பதிப்பகம்.
3. சந்திரசேகரன்.சோ, (2005), கல்வியல் கட்டுரைகள், பூபால சிங்கம் புத்தகசாலை, கொழும்பு
4. பக்கீர் ஜ.ஃபர். ப. கா ,(2009), மாணவரின் வகுப்பறை நடத்தை , குமரன் புத்தக சாலை, கொழும்பு -12
5. மகேசன். ஏ, (2010) விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும் , ஹிரா அச்சகம், ஏறாவூர்.
6. முத்துலிங்கம். ச, (2002) கல்வியும் உளவியலும் பகுதி-1 ,லங்கா புத்தகசாலை, கொழும்பு
7. தனபாலன். பா. உம் கணேசநாதன். ஞா ,(2012), பாடசாலையில் ஆலோசனை வழங்கள், லங்கா பதிப்பகம்
8. ஜெயராசா. சபா, (2008) கல்வி கோட்பாடுகளும் மற்றும் சிந்தனைகளும் , சேமமடு பதிப்பகம் , கொழும்பு
9. விக்கினேஸ்வரன். ந, (2014) கஸ்டப்பிரதேச பாடசாலைகளில் மாணவர்களின் இடை விலகல், வீர கேசரி வெளியீடு
10. ஜெயராசா சபா. (2008), கற்றல் தொடர்பான இடர்களை எதிர் கொள்வோர், அகவிழி